# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 217/மா/2022**
**நாள் : 03.01.2023**

திரு. R.C. விக்னேஷ்,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–15,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, ஒக்கியம் துரைப்பாக்கம், மேட்டுக்குப்பம் (OMR) ராஜீவ் காந்தி சாலை, எண்.3/429 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R.C. விக்னேஷ் என்பவரின் 25.10.2022 நாளிட்ட மனு 31.10.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 217/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, ஒக்கியம் துரைப்பாக்கம், மேட்டுக்குப்பம் (OMR) ராஜீவ் காந்தி சாலை, எண்.3/429 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R.C. விக்னேஷ் தன்னுடைய முறையீட்டு மனுவில்,

"I have sent a complaint to the said respondents, regarding an illegal and unauthorized construction but no action was taken on my complaint more than a year ago so far but the illegal and unauthorized construction received a Completion Certificate and was illegally installed by EB Connections and running a K2A Prep School & Premium Day care at the new address No.3A, Mount Batten Street, Mettukuppam, Thoraipakkam, Tamil Nadu – 600 097 (Old Address No.3/761. Mount Pattern Street, Mettukuppam, (OMR), Chennai - 600 0097). without proper frontage, exit, setback etc. which causes any accident or incident occurs at the aforesaid illegal construction building many children will be put in grave danger and for that the respondents will be held responsible.

Therefore, I request you to direct them to take necessary action on my complaint.

Further, I request you to take appropriate action against the respondents for not action taken on my complaint within the timeline.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–15ன் மண்டல அலுவலருக்கு 11.11.2022 நாளிட்ட கடிதம் இம்முறைமன்றத்தால் அனுப்பப்பட்டது. அவர் தனது 19.12.2022 நாளிட்ட அறிக்கையில்:–**

மனுதாரர் குறிப்பிட்டுள்ள கட்டிடத்திற்கு உரிய கட்டிட வரைப்பட அனுமதி கேட்பு தாக்கீது கடந்த 17.12.2022 அன்று வழங்கப்பட்டுள்ளது. கட்டிட வரைபட அனுமதியின் நகல் பெறப்பட்டவுடன் உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துள்ளார்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 20.12.2022 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 02.12.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 20.12.2022 அன்று நடந்த நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் 20.12.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்தனர்**:-

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15க்கு உட்பட்ட சென்னை மேட்டுக்குப்பம் துரைப்பாக்கம், மவுண்ட்பேட்டன் தெரு எண் 3A –ல் உள்ள K2A Prep School & Premium Day care என்கின்ற காப்பகம் அமைந்துள்ள கட்டடத்திற்கான வரைபட கேட்பு அறிவிப்பு (Notice calling for approval Plan) கடந்த 17.12.2022 அன்று கோரப்பட்டுள்ளது என்பதையும், கட்டட வரைபட அனுமதி பெறப்பட்டவுடன், அதனைத் தொடர்ந்து கால அவகாசமான 15 நாட்கள் முடிந்த பின்னர், வரைபட நகல் கட்டட உரிமையாளர் சமர்ப்பிக்காதபட்சத்தில், மேற்கண்ட கட்டடத்திற்கு Lock and Seal Notice வழங்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மனுதாரரின் மனு மற்றும் எதிர்மனுதாரர்களின் வாக்குமூலம் மற்றும் மண்டலம் 15ன் மண்டல அலுவலரின் அறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன.

சென்னை மேட்டுக்குப்பத்தைச் சேர்ந்த திரு. R.C. விக்னேஷ் என்பவர் மேட்டுக்குப்பம், மவுண்ட் பேட்டன் தெரு, கதவு எண்.3ல், K2A Prop School & Premium Day Care என்ற பள்ளி, முன்பக்கம் இடைவெளி, வெளியேறும் வழி, போன்றவைகள் இல்லாமலும் பெருநகர மாநகராட்சியின் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளதாகவும், அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் தன்னுடைய மனுவில் கோரியுள்ளார்.

20.12.2022 அன்று நடைபெற்ற இம்முறைமன்றத்தின் விசாரணையில், மனுதாரர் ஆஜராகவில்லை. 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்

சட்டத்தின் மூலம், இம்முறைமன்றத்திற்கு உரிமையியல் நீதிமன்ற அந்தஸ்து வழங்கியுள்ள நிலையில், நேரடி விசாரணைக்கு வருமாறு 09.12.2022 அன்றே அழைப்பாணை அனுப்பட்டும் விசாரணை நாள் அன்று தன்னால் விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை என்று தெரிவிப்பது மிகவும் கண்டிக்கதக்கது.

மேற்கண்ட பள்ளியானது 2018 முன்பிலிருந்து இயங்கி வருவது, மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 15ன் அலுவலருக்கு அனுப்பிய மனுவின் நகலின் மூலம் தெரியவருகிறது. இப்பள்ளியானது 2018 முன்பிலிருந்தே இயங்கி வந்தாலும் மனுதாரர் இம்முறைமன்றத்திற்கு மனு அனுப்பிய பின்னர்தான் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர்-15 கட்டிட வரைப்பட அனுமதி கோரி 17.12.2022 நாளிட்ட தாக்கீது அக்காப்பக உரிமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. மேலும், கட்டிட வரைபட அனுமதியின் நகல் பெறப்பட்டவுடன் உரிய மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மண்டலம்-15ன், மண்டல அலுவலர் தன்னுடைய அறிக்கையில் தெரிவித்துள்ளார். இதிலிருந்து இப்பள்ளி கட்டடம் கட்டப்பட்ட ஆரம்ப நிலையிலேயே மண்டல அலுவலர்களால் கள ஆய்வு செய்யப்படவில்லை என்பதும் தெரிய வருகிறது.

மேற்கண்ட நிகழ்வில், விசாரணைக்குப்பின் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது:-

மேட்டுக்குப்பம், மவுண்ட் பேட்டன் தெரு, கதவு எண்.3Aல் உள்ள K2A Prep School & Premium Day care கட்டடம் கட்டப்பட்ட ஆரம்ப நிலையிலேயே கள ஆய்வு செய்யாமல், இம்முறைமன்றத்திற்கு மனுதாரர் மனு அளித்த பின்னர், வரைபட கேட்பு அறிவிப்பு 17.12.2022 அன்று வழங்கியுள்ளது மண்டல அலுவலகத்தின் மெத்தனப் போக்கே இதற்கு காரணம் என்று இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. எனவே, ஆரம்ப நிலையிலேயே கள ஆய்வு செய்யாமல் பணியில் சுணக்கமாக இருந்த முன்னாள் மற்றும் தற்போதுள்ள மண்டல அலுவலர்களை இந்நிகழ்விற்கு பொறுப்பாக்கி அவர்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும், மண்டலம்-15ன் மண்டல அலுவலர் தன்னுடைய அறிக்கையிலும், உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் தங்களுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறும், மேற்கண்ட கட்டடத்திற்கான வரைபட அனுமதி பெறப்பட்டவுடன், அதன் அடிப்படையில் விதிமீறல் இருக்கும்பட்சத்தில் சட்டபூர்வமான தொடர் நடவடிக்கை எடுக்குமாறு மண்டலம்-15ன் உதவி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

The Zonal Officer is directed to send an action taken report in the next 15 days as to what has been done in pursuance to the orders of this Forum. Any slackness and delay will be viewed seriously.

2023–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 3–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. R.C. விக்னேஷ்,
3/429, ராஜீவ் காந்தி சாலை,
மேட்டுக்குப்பம் (OMR),
ஒக்கியம் - துரைப்பாக்கம்,
சென்னை – 600 097.

2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

3. துணை ஆணையர், (பணிகள்),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
*He is requested to ensure the implementation of this order*

4. மண்டல அலுவலர்,
மண்டலம்–15, பெருநகர சென்னை மாநகராட்சி,
120, ராஜீவ் காந்தி சாலை, (OMR)
சோழிங்கநல்லூர், சென்னை- 600 119.

5. துணை ஆணையர்,
மண்டலம்–15, பெருநகர சென்னை மாநகராட்சி,
120, ராஜீவ் காந்தி சாலை, (OMR)
சோழிங்கநல்லூர், சென்னை- 600 119.
*He is requested to ensure the implementation of this order*

6. கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

10/01/23
செயலாளர்.